Registered as a News Paper in Sri Lanka   பக்கங்கள்: 08   விலை ரூபா: 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02   திருவள்ளுவர் ஆண்டு 2022 வைகாசி 31   ( 14 - 06 - 1991 )   வெள்ளிக்கிழமை   ஓசை: 116

## "வேங்கைகள் இந்நாள் எழுதிய சான்று"

(நமது நிருபர்)

யாழ். முற்றவெளி மாவீரர் அரங்கிற்கு அருகாமையில் யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையின் அத்திவாரக் கற்களைத் தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ளலாம்.

டச்சுக் கோட்டை, ஒல்லாந்தர் காலம் முதல் சிங்களவர் ஆட்சிக்காலம் (8 ஆம் பக்கம் பார்க்க)

## 8 ஆம் நாள் விழாக்காண அலை அலையாய் மக்கள்

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் விழாவின் எட்டாம் நாள் விழாவுக்காக யாழ் முற்றவெளி மைதானம் சனசமுத்திரமாக மின்னொளியில் காட்சி அளித்தது.

முற்றவெளியும் அதனை அண்டிய வீதிகளும் சிவப்பு, மஞ்சள் தேசிய வர்ண தோரணங்களாலும் மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வர்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நான்கு பெரிய அளவிலான சிகரங்களும் இருபதுக்கும்மேற்பட்ட சிறிய சிகரங்களும் பல வீர வளைவுகளும் முற்றவெளி மைதானத்தை அலங்கரித்து நின்றன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய நிகழ்ச்சிகள் இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மழை காரணமாக நேற்று நடைபெறவிருந்த முத்தமிழ் விழாவின் எட்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று பிற்போடப்பட்டுள்ளன என்று விடுதலைப் புலிகள் பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அறிவித்துள்ளார்.

இன்று நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகள் என எமது பத்திரிகையின் உட்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நாளை நடைபெறவுள்ளன. நாளை நடைபெறவிருந்த (8 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றுமுன்தினம் நெல்லியடியில் இடம்பெற்ற முத்தமிழ் விழாவின் 7ஆம் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா அவர்கள் உரை ஆற்றுவதை முதலாவது படத்திலும், மாவீரர் நாளையொட்டி நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மாணவனுக்கு அவர் பரிசு வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# கொக்கட்டிச்சோலை பகுதியில் 2ஆவது படுகொலைச் சம்பவம்

## 160 தமிழர் கோரக்கொலை வீடுகள் தீக்கிரை

கொக்கட்டிச் சோலையில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட காட்டுமிராண்டித் தனமான தாக்குதலில் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட நூற்றி அறுபதிற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் குத்தியும், வெட்டியும், சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர், பலர் காயமடைந்தனர். கொக்கட்டிச் சோலையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட இரண்டாவது படுகொலைச் சம்பவம் இதுவாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொக்கட்டிச் சோலை என்னும் இடத்தில் நேற்று முன்தினம் கிராமங்களுக்குள் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினர் இப்படுகொலைகளைப் புரிந்ததாக பாராளுமன்ற எம்.பி. ஒருவர் தெரிவித்ததாக நேற்றிரவு பி.பி.ஸி. அறிவித்தது.

மேலும், இப்படுகொலைகள் நேற்றுக் காலைவரை (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே குழியில் 14 தமிழரை இராணுவம் போட்டு மூடியது

(நமது நிருபர்)

கொக்கட்டிச்சோலையில் படுகொலைகளைப் புரிந்த சிறிலங்கா இராணுவம் ஒரே குழியில்போட்டு பதின்னான்கு சடலங்களை எரித்ததாகவும் பின்னர் அதை மூடிவிட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மனித உரிமைக் குழுவிற்கு சிறிலங்கா வாய்ப்பூட்டு!

(கொழும்பு)

சிறிலங்கா சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் வர அனுமதி வழங்கியதால், ஒரு நல்லெண்ண முன்னேற்றமாக ஜெனிவாவில் மேற்படி சபையின் கூட்டத்தில் சிறிலங்காவிற்கு எதிராகத் தீர்மானம் முன்மொழியப்படவில்லையாம். ஆனால் மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் (8 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை தொடர்பாக

## தாயும் மகனும் சிறையில் மகள் தேடப்படுகின்றார்

(சென்னை)

ராஜீவ்காந்தியின் கொலைக்குக் காரணம் எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணின் பெயர் பானு என இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை பொலிஸாரினால் ராஜீவ் கொலைதொடர்பாகக் கைது செய்து காவலில் வைக்கப்பட்டுள்ள பெண்ணின் மகளையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

கொலை நடந்த அன்று எடுக்கப்பட்ட படங்களில் இருந்தே ஏனும் பல தகவல்கள் பெறக்கூடியதாக இருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் குண்டுவெடிப்புக்கு வேறு ஒரு (8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவுக்கு உதவ உதவி வழங்குவோர் தயக்கம்

(கொழும்பு)

சிறிலங்காவுக்கு உதவும்நாடுகளின் கூட்டம் மாமுல்படி பாரிஸ் நகரில் வரும் ஒக்டோபர் மாதத்தில் கூடாது. சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு மறைமுகமான எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையிலேயே உதவி வழங்கும் நாடுகள் காலம்தளர்த்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

கொழும்பிற்கும் உதவிவழங்கும் நாடுகளுக்கும் இடையில் சமீபகாலங்களில் ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதங்களைப்பூசி மெழுகும் வேளையில் நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் அரசமுறைப் பயணம்ஒன்றை மேற்கொண்டு வாஷிங்டன் சென்றுள்ளார்.

உதவி வழங்கும் நாடுகள் சென்ற வருடம் நூறுகோடி அமெரிக்க டாலர் பெறுமதியான உதவியை இலங்கைக்கு (8 ஆம் பக்கம் பார்க்க)

## எம். எஸ். எவ் தாக்கப்பட்டதற்கு

## அரசாங்க தரப்பு நியாயம் கற்பிக்க முயற்சி

(லண்டன்)

பிரான்ஸ் நாட்டு மருத்துவக் குழுமீது வவுனியாவில் வைத்து சிறிலங்கா விமானப் படை தாக்கியமையிட்டு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் எம். (8 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்தும் ஷெல் தாக்குதல்

காரைநகரில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் பொது மக்களின் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஆடுது புலிப்படை அமைறக்களந்தன்னில்
சூடுது புதுக்கலை நந்தமிழ்த் தாய்க்கு
பீடுறு பெருங்கதை தொடருமிப்போதில்
நீடு நின்றிலங்குக என்று
நாம் வாழ்த்துகின்றோம்.

யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள்

## வரி விளம்பரம்


### தேவை

உரும்பராயில் உள்ள பாலர் பாடசாலைக்கு பயிற்சி பெற்ற ஆசிரியை தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 'கந்தன் கருணை' உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

(B-1458)

### பயிற்சி வகுப்பு

விஞ்ஞான முறைப்படி உடை தயாரித்தல், சிகையலங்காரம் ( Hair Style, Cake Icing, General Cookery, Bridal Make-up, Flower Making Interior Decoration; அனித்தா பயிற்சி நிலையம், பூநாறி மரத்தடி, கொக்குவில்,

(B-2650)

### தவறிவிட்டது

இ.அழகராஜா ஆகிய எனது அடையாள அட்டையுடன் மணிப்பர்ஸ் 216, காங்கேசன் துறை வீதி தேநீர்க் கடைக்கு முன்னால் 13-6-91 வியாழக்கிழமை மாலை 4 30 மணிக்கும் 5.00 மணிக்கும்இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(R/1460)


## ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்திவரும் முத்தமிழ் விழாவையொட்டி யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஓவியக் கண்காட்சி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக் கண்காட்சியினை மூத்த பெரும் ஓவியர்களான மு. கனகசபை க. ராசரத்தினம், அ. மாற்கு கே. நடராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றி திறந்து வைத்தனர். இவ்விழாவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியன் கலந்து கொண்டார்.

இந்த ஓவியக் கண்காட்சி நாளை சனிக்கிழமை வரை தினமும் மாலை 2 - 30 மணி முதல் மாலை 6-00 மணிவரை திறந்திருக்கும்.

கண்காட்சியை பார்வையிடுவதற்காக நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் இந்த மண்டபத்தில் திரண்டிருந்தனர். (அ

## தூதுவர் வெளியேற்றம் பயமே காரணம்

(லண்டன்)

மனித உரிமைமீறல் குறித்து சிறிலங்கா அரசின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் பற்றிய பயத்தினாலேயே சிறிலங்கா அரசு பிரிட்டன் தூதுவரை வெளியேற்றியுள்ளது என பிரிட்டனின் வெளியுறவுத்துறை சிறிலங்கா அரசைக் கடுமையாக விமர்சித்துள்ளது;

கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதுவர் டேவிட் கிளாட்ஸ்ரோனை வெளியேற்றிய செயல் முழுக்கமுழுக்க அநீதியானது எனத் தெரிவித்திருக்கும் பிரிட்டனின் வெளியுறவுத்துறை, அதன் இணை அதிகாரி கொழும்பு செல்லவிருந்த விஜயத்தை ரத்துச் செய்திருப்பதாக அறிவித்துள்ளது.

## சொத்து விபரங்களை வெளியிட வேண்டும்

(கொழும்பு)

சிறிலங்காவில் கடந்தமாதம் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத்தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டு மேயராக, உதவி மேயராகத் தெரிவு செய்யப்பட்டோர் தமது சொத்து விபரங்களை தெரிவிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

பதவியேற்கும் ஜூலை மாதத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் தமது சொத்து விபரங்களை வெளியிட வேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது!

## தோள்கொடு தோள்கொடு தோள்கொடு தோழா

தோள்கொடு தோழா தோள்கொடு
தோள்கொடு தோழா தோள்கொடு
நாள்படவேண்டாம் நாளையும் வேண்டாம்
நம்கடன் இன்றே செயல் படவேண்டும்

துடிப்புடன் ஈழப்
புலிப்படை சேர்ந்து
பொடிப் பொடியாக்கிப்
பகைவரை வெல்ல -- தோள்

புலிக்கொடி ஆட
போலிகள் ஓட
கலங்கிய தீய
கவலைகள் மாய -- தோள்

சுதந்திரனில் ஜோதி
காத்திட நீதி
விளைந்திட சாதி
விரட்டிட வாதி -- தோள்

— "கல்வயல்"


இன்று முதல்
யாழ் நகரில் புதிய இடத்தில்

DHL
WORLDWIDE EXPRESS

வெளியிடங்களுக்கான துரித தபால் சேவையை உறுதிப்படுத்தும் நோக்குடன்

புதிய இடத்தில் தனது சேவையை ஆரம்பிக்கிறது.

**DHL INTERNATIONAL**

C/O Cosmos Marketing Services,
120, K. K. S. Road,
JAFFNA.

(B-2661)

தமிழீழ மக்களே! ஓர் நற்செய்தி!!
மங்களகரமான ஆரம்பம்

## சுவையருவி

இல.05,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

15-06-1991 சனிக்கிழமை
காலை 6 00 மணிக்கு
கோலாகலமாகத் திறந்து
வைக்கப்படுகின்றது.

உங்கள் சேவைக்கென,

- குளிர்களி (ICE CREAM) குளிர்பான வகைகள்
- சைவ, அசைவ, மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள்
- காலை, மதிய, மாலை உணவுகள்
- சுவைமிகு தேநீர், கோப்பி பானங்கள்
- கையில் எடுத்துச் சென்றிட பொதி உணவு

என்பன இங்கே குறைந்த விலையில் உகந்த சூழலில் காத்திருக்கின்றன.

வைபவ தேவைகள் யாவும் குறித்த தவணையில் தயாரித்து வழங்கப்படும்.

குறிப்பு:- சைவ, அசைவ, உணவு வெவ்வேறு சமையலறைகளில் தயாரிக்கப்பட்டு, தனிப் பகுதிகளில் பரிமாறப்படும்.

தங்கள் ஆதரவை தயவுடன் நாடுகிறோம்.

(B-2668)


## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 06 - 14

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் இருவையாற்றில் சிறிலங்காப்படைகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

தம்பா/சூட்டி (இராசாமி சக்கரப்பிள்ளை - தர்மபுரம், கிளிநொச்சி)

இதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படைகளின் எறிகணைத் தாக்குதலால் உயிரிழந்த முள்ளியவளையைச் சேர்ந்த பொதுமகன்

1987ஆம் ஆண்டு பூஸாமுகாமில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த 12தமிழ் இளைஞர்கள்(ஒப்பரேஷன் லிபரேஷனின் போது கைது செய்யப்பட்டவர்கள்)

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி பழைய முறிகண்டியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

லெப். கதிரவன் (கோவிந்து தேவராசா -குமரபுரம்)

வட்டக்கச்சியில் தேசவிரோதிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமடைந்த

ஜேக்கப் (திருநாவுக்கரசு ஜெயக்குமார் - வன்னேரிக்குளம்)

2ஆம் லெப். தாஸ் (செல்லப்பு விக்கினேஸ்வரன் - உருத்திரபுரம்)

1990 ஆம் ஆண்டு ஆனையிறவு முகாம் இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த குரே

மாங்குளம் சிறிலங்காப்படை முகாம் மீதான தாக்குதலின் போது வீரமரணமடைந்த

மேஜர் சிங்கன் (இராசையா மகேந்திரன் - 4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

கப்டன் வினோத் (சின்னத்தம்பி விக்கினேஸ்வரன் - முள்ளி ஒழுங்கை, ஆனைக்கோட்டை)

கப்டன் பெனா (தம்பிஐயா சசீந்திரன் - புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி)

காமினி (பீற்றர் செல்வராஜ் - டிப்போ வீதி, கிளிநொச்சி)

சர்வா (சுப்பையா குகனேஸ்வரன் - 773 யோகபுரம் கிளிநொச்சி)

சுஜாத் (நடராசா - 90 செல்வபுரம் வடக்கு, வவுனிக்குளம்)

லோலோ (செல்லத்துரை சிவதாஸன் - பெரியகுளம் நெடுங்கேணி)

முகமட் (ஐயாத்துரை குமாரதாசன் - வட்டக்கச்சி)

அரி (ஆறுமுகம் மோகனதாஸ் - 122, கிருஷ்ணபுரம், கிளிநொச்சி)

வதனன் (வட்டக்கச்சி)

கப்டன் கஜன் (இபாகரராசா பொன்னம்பலம் - மாமடு)

சிறி (சுப்பிரமணியம் வரதன் - முள்ளியவளை)

சசி (வல்லிபுரம் குணபாலசிங்கம் - ஒட்டிசுட்டான்)

சிறிலங்கா இராணுவத்துடனான மோதல்களில் வீரமரணமடைந்த

முருகதாஸ் (பஞ்சலிங்கம் புஸ்பாகரன் - சாம்பல்தீவு திருக்கோணமலை)

அர்ஜுன் (ஒட்டமாவடி)

ரகுவரன் (முருகேஸ் இளசமாலை - தாழ்வு மன்னார்)

கலையன் (கச்சுமுகமது அடில்கஸன்-1ஆம் வட்டாரம் புல்மோட்டை)

தேவா (ஞானப்பிரகாசம் விக்கினேஸ்வரன் - சிப்பித்திடல், தம்பலகாமம்)

அன்ரன் (இ. வசந்தன் - முள்ளிப்பொத்தானை)

சுரேன் (கந்தையா சிவபாலன்)

லெப்.சுதர்சன் (சிவலிங்கம் ரவீந்திரன் - கிரான்)

குணேஷ் (சோழமுத்து பாலசுப்பிரமணியம் - 30, உடையார்கட்டு)

நளன் (இபாகரராசா கார்த்தன் - கொக்குத்தொடுவாய்)

மூதூரில் சிறிலங்காப் படையின் எறிகணைத் தாக்குதலால் உயிரிழந்த 3 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2669)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி





உயர்ந்த குறிக்கோளுக்காகப் போராடுவதும் உழைப்பதும், வாழ்வதும் எமக்கெல்லாம் முழுமையாக உயிர் நிறைவை, ஆத்ம திருப்தியைத் தருகின்றன.

-தலைவர்
வே. பிரபாகரன்

## கண்ணீரும் பொருதும்!

வீழ்ந்த நம் தேசத்தை
　　எழுந்து நாம் மீட்போமே
அழிந்த நம் தேகங்கள்
　　அடர்த்தியாய்ப் பூக்குமே
கொழுந்து விட்டெரிந்திடும்
　　கொள்கையைக் காட்டவே
வழிந்து வந்து விழும்
　　கண்ணீரும்தான் பொருதுமே!

▣ கரும்பறவை







புலிகளைத் தேடி சந்து பொந்தெல்லாம் இந்திய இராணுவத்தினர் சல்லடை போட்டுத் தேடித் திரிந்த காலம் அது. அன்றைய வேட்டை பொக்கணை என்ற கிராமத்தில். நாளாந்தம் இரவில் இந்தக் கிராமத்தில் தான் புலிகள் தங்கிச் செல்கின்றனர் என்ற செய்தி இந்திய இராணுவத்தின் செவிகளில் விழவே அவர்கள் காத்திருந்தனர் புலிகளைத் தேடி. தினமும் இடுப்பளவு தண்ணீருக்குள்ளால் சென்று பொக்கணையில் படுத்துவிட்டு அதிகாலையில் மீண்டும் அதே வழியாகத் திரும்புவர் புலிகள் என்று அறிந்து தண்ணீருக்கு அப்பால் சிறு பற்றைகளுக்குள் நிலையெடுத்துப் படுத்துக் கிடந்தனர்.

இராணுவம் போராளிகளைத் தேடிக் காத்துக் கிடப்பதைக் கண்ட ஒரு பொதுமகன் தோளிலே வலை ஒன்றைப் போட்டுக் கொண்டு மீன்பிடித் தொழில் செய்பவர் போல் பாவனை செய்து கொண்டு தண்ணீருக்குள்ளால் இறங்கி பொக்கணையை நோக்கிச் சென்றான். ஹிந்தி மொழிக் குரல்கள் அவனை அழைத்தன. ஆனால் அவன் திரும்பிப்பார்க்கவில்லை. காது கேளாதவன் போல் நடந்து சென்று போராளிகள் இருக்குமிடத்தைச் சென்றடைந்தான். அவன் அப் போராளிகளை நேசித்தான், போராட்டத்தை நேசித்தான்; அப்படி போராட்டத்தை நேசிக்கும் தன்மையை அந்தக் கிராம மக்கள் மத்தியில் உருவாக்கியவன் தாமு. அதனால் தான் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் எனத்தெரிந்தும் போராளிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு மேலீட்டால் இப்படியாக நடந்து கொண்டான் அப்பொதுமகன்.

அதனால்தான் தாமு இறந்துவிட்டான் என்ற செய்தி ஒவ்வொரு மக்களுக்கும் தமது சொந்த இழப்பாகத் தெரிந்தது. அதனால்தான் உறுமித் திரியும் இந்திய இராணுவ வாகனங்களைக் கண்டு அவற்றிற்குப் பயப்படாமல், புலியைக் கண்டாலும் குற்றம், சிரித்தாலும் குற்றம், கதைத்தாலும் குற்றம் என்று கூறும் இந்திய இராணுவத்தின் துணைக் குழுக்களின் மிரட்டலின் மத்தியிலும், நாளாந்தம் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் காணாமற் போகையிலும், சுட்டுத் தெருத் தெருவாக வீசப்படுகையிலும் தாமுவின் உடல்மீது, புலிக்கொடி போர்த்தி அவனது இறுதிச் சடங்குகளைச் செய்தனர் அவனை நேசித்த அந்த மக்கள். தெருத் தெருவாக கறுப்புக்கொடிகளையும் தோரணங்களையும் கட்டித் தமது துயரத்தைத் தெரியப்படுத்தினர். அவர்களுக்குத் தெரியும் இந்திய இராணுவத்துக்கும் மனிதாபிமானத்துக்கும் வெகு தூரம் என்று, ஆனாலும் அதற்கெல்லாம் அடங்கிப் போக அவர்கள் தயாராக இல்லை.

சடலத்தின் மீது புலிக்கொடி போர்த்திருப்பதைக் கண்டு சினந்து இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களை இந்திய இராணுவத்தினர் தாக்கினார்கள், ஹிந்தியால் திட்டினார்கள். இதுதான் சுதந்திரப் போராட்டம்மூலம் விடுதலை பெற்ற இந்தியாவின் உண்மைச் சொரூபம் என்று காட்டினார்கள். ஆனால் மக்கள் அஞ்சவில்லை. தொடர்ந்தும் எவ்வித மாற்றமுமின்றி தமது தீர்மானத்தின்படியே புலிக்கொடி போர்த்தி சிறப்பான முறையில் அந்த வீரனது இறுதிச் சடங்குகளை முடித்தார்கள். அதுவரை காலமும் புலிகளின் பலம் ஆயுதம் மட்டும்தான். ஆயுதம் இல்லாவிடில் புலிகளை விரைவில் அழித்தொடுக்கலாம் என்ற



தாமு

நம்பிக்கையில் இருந்த இந்திய இராணுவத்தின் துணைக் குழுக்கள் அன்றுதான் ஒரு உண்மையைப் புரிந்தனர். எல்லாவற்றையும் விட மக்கள் சக்தி புலிகளிடம் உண்டு என்பதை.

அந்த மக்கள் சக்திதான் தாமுவை பல தடவை இந்திய இராணுவத்தின் பார்வையிலிருந்து மறைத்து வைத்தது. மக்கள் இவன்பால் காட்டிய அன்பும் ஆதரவும் தான் எந்த நிலையையும் எதிர்கொள்ளும், தாங்கிக் கொள்ளும் மனநிலையை இவனுக்குக் கொடுத்தது.

அதனால் தான் இவனைத் தேடிச் சென்ற இந்திய இராணுவத்தினர் இவனது வீட்டையும் உடைமைகளையும் தீயிட்டுக் கொளுத்திய போது, இவனது குடும்பத்தவர் அனாதரவாக தெருவில் நின்ற போது இவனதுமனம் கலங்கவில்லை; எமது மண் விடுவிக்கப்படும் வரை இப்படியான நிகழ்வுகள் தொடரத்தான் செய்யும். அகதியாகத் தமிழன் உலகெங்கும் ஓடும் நிலை தமிழீழம் மலரும் போது மட்டுமே மறையும் என உணர்ந்து கொண்டான். அதனால்தான் தான் முற்றுகைக்குள்ளாகி சேற்று மீன்களைச் சாப்பிட்டு, சேற்றுத் தண்ணீரைக் குடித்து வாழவேண்டிய நிலைகள் ஏற்பட்ட போதும்போராட்டம் மீது இவனுக்கு இருந்த பிடிப்பு அதிகமாயிற்று.

இவன் தனது பெயரைத் தாமு என்று வைத்துக்கொண்டதே போராட்டம் பற்றிய நினைவு எப்போதும் தனது நெஞ்சில் இருக்கவேண்டும். என்பதற்காகவே. தாமு என்ற பெயர் இவனுடைய மாமனுடையது; வெலிக்கடைச் சிறையில் முதல்நாள் 'இல்' அனுஷ்டித்த கைதிகளால் மறுநாள் கொல்லப்பட்டவர் அவர். 1983ஆம் ஆண்டு இச்சம்பவம் இடம்பெற்றது. ஆகவே தனது பெயர் உச்சரிக்கப்படும் ஒவ்வொரு தடவையும் வெலிக்கடைப் படுகொலை நினைவுக்கு வருவதற்காக தாமு என்ற பெயரைத் தனக்குத் தானே சூட்டிக்கொண்டான். அன்றி விருந்து புத்தூரின் இரண்டாவது தாமு இவன்.

மிகச் சிரமமான வேலைகளை ஏற்றுக்கொண்டுசெய்து முடிப்பதில் இவனுக்குப்பிடிப்பு அதிகம். 1987இல் வடமராட்சியில் நடந்த ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின்போது வடமராட்சிக்குள் நிற்கும் போராளிகளுக்குத் தேவையான ரவைகள் மற்றும் பொருள்களைக் கொண்டு செல்வது, காயமடைந்த போராளிகளை சுமந்துவருவது போன்ற பணிகளில் இரவு, பகல் பாராது மேற்கொண்டான். அதே போல இந்திய இராணுவத்தின் மோதலின் பின் வலிகாமத்துக்கு வெளியே போராளிகளைக் கொண்டு போய் விடுவதும் வலிகாமத்துக்கு உள்ளே இருக்கும் போராளிகளுக்குத் தேவையானவற்றைப் பெற்று வருவதும் இவனது முக்கிய பணியாக இருந்தது. பரந்தநீண்ட வெளிகளை சைக்கிளிலும், கால் நடையாகவும் கடக்க வேண்டியிருந்தது. அதனால் பெரும்பாலான மக்களுக்கும் போராளிகளுக்கும் இவன் நெருக்கமாகினான்.

கலைந்த கேசம் ஒழுங்காகத் துவைக்காத உடைகள், ஏற்றுக் கொண்ட வேலையைச் செய்து முடிக்க எத்தனை மைல் என்றாலும் சைக்கிள் ஓடவோ, நடக்கவோ தயாராக இருக்கும் தன்மை; இவையெல்லாம் இவன் மீது ஏனைய போராளிகளுக்கு ஒரு தனிப் பிரியத்தை, மதிப்பை ஏற்படுத்தியது. இவனைத் தேடிய இந்திய இராணுவத்தினர்கூட இந்த அடையாளங்களையே மனதில் கொண்டு இவனைத் தேடித்திரிந்தனர்.

ஆனால் அதுதான் அவனது இறுதி நாள் என்பதாலோ என்னவோ அன்று அவன் புதிய ஆடைகள் அணிந்தான். "எனக்கு இது வடிவா இருக்குதோ? நான் எப்பிடி இருக்கிறன்" என்றெல்லாம் தனது நண்பர்களிடமும் தன்னை நேசித்தவர்களையும் திரும்பத் திரும்பக் கேட்டான். அவனை அந்தக் கோலத்தில் பார்த்தறியாத அவர்கள் சிரித்தபடியே அவனுக்கு விடைதந்தனர்.

காட்டிக்கொடுத்தவனுக்குக்கூட இவனை உடனே அடையாளம் காணமுடியாமற் போயிற்று. நின்று நிதானித்து இவன் தாமுதான் என்பதை உறுதிப்படுத்திவிட்டே தாமு தாமு என்று உச்சரித்தான். இராணுவத்தினரும் இவனை உயிரோடு பிடிக்க முயற்சித்தனர். ஆனால் அவர்களது நோக்கம் நிறைவேற தாமுவின் கழுத்தில் இருந்த சயனைட் அனுமதிக்கவில்லை. சயனைட் உட்கொண்ட போராளிகளின் வரிசையில் இவனது பெயரைப் பதிக்க வைத்தது அச்சம்பவம்.

# சங்காரம்

சிறுகதை

துரை-சுப்பிரமணியன்

சரசு முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருந்தாள். முற்றத்து வேப்ப மரத்திலிருந்து காகமொன்று இடைவிடாது கரைந்து கொண்டிருந்தது. காகத்தைக் கல்லால் எறிந்து கலைக்கும் பொழுது அவளுக்கு மனதில் ஓர் எண்ணம் தோன்றியது.

''இண்டைக்கு இவற்றை கடிதம் சிலநேரம் வருகுதோ தெரியாது கடிதத்தைஇரண்டு மூன்று கிழமையாகக் காணேல்லை. இந்தக் காகமும் இண்டைக்கு ஒரே கத்தாய் கத்திக் கொண்டிருக்குது''

சவூதியில் வேலைபார்க்கும் அவளின் கணவன் ரகுநாதனின் கடிதத்தை அவள் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அன்று வேளையோடு காகமும் வேப்ப மரத்திலிருந்து கரைந்ததால், அன்றைக்கும் கடிதத்தை எதிர்பார்த்தாள் சரசு.

முற்றத்தைக் கூட்டி முடிந்ததும் சரசு மாதுளை மரத்திற்குக் கீழ் சட்டி பானைகளையும் மற்றும் பாத்திரங்களையும் கொண்டு வந்து வைத்துவிட்டு கிணற்றடிக்குப் போய் தண்ணீர் அள்ளிக் கொண்டு வந்து வைத்து விட்டு பாத்திரங்களைக் கழுவுவதற்காகக் குந்தும் பொழுதுதான் அவளின் ஒரே யொரு பிள்ளையான முகுந்தன் நித்திரையால் எழுந்து வந்து அழுது கொண்டிருந்தான். சரசு உடனே ஓடிப்போய் அவனைத் தூக்கி, குசினிக்குள் கொண்டு போய் தேனீர் பருக்கி விட்டு வெளியில் கொண்டு வந்து முற்றத்தில் விட்டாள். அவன் சந்தோசமாக முற்றத்தில் நின்று விளையாடினான்.

சரசு மீண்டும் சட்டிபானைகளைக் கழுவிக் காய விட்டு விட்டு மகனைக் குளிப்பாட்டுவதற்காக கிணற்றடிக்குக் கொண்டு சென்றாள்.

மகனுக்குக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும் பொழுதும் அவள் வெளி வாசலையே பார்த்தபடி இருந்தாள். மணி அடிக்கும் சத்தம் கேட்டது. அவள் எட்டி வடிவாகப் பார்த்தாள். அது காகிதக்காரனின் மணிதான். கிணற்றடியில் நின்றபடியே மச்சாள் பூமணியைக் கூப்பிட்டுக் கடிதத்தை வாங்கி வைக்கும் படி கூறிவிட்டு திரும்பவும் மகனுக்குத் தொடர்ந்து குளிப்பாட்டினாள். குளிப்பாட்டி முடிந்ததும் கிணற்றடியை விட்டு விரைவாக ஓடிவந்தாள். கடிதத்தைப் படிக்க வேண்டும் என்ற அவா அவளுக்கு.

முகுந்தனைக் கொண்டு வந்து நன்றாகத் துடைத்து பவுடர் போட்டு பொட்டு வைத்து, சட்டையையும் போட்டுவிட்டு மச்சாள்பூமணியிடம் ஓடிப்போய் கடிதத்தை வாங்கிப்படித்துப்பார்த்தாள். அதில் அவ்வளவு விசேடமாக ஏதும் இல்லாவிட்டாலும் அவன் லீவில் வந்து நின்ற பொழுதுதான் அடைந்த சந்தோசங்கள் பற்றியும் மகனின் குறும்புத்தனங்கள் பற்றியும் மனைவி கொடுத்த ஒத்துழைப்புகள் பற்றியும் சுவாரஸ்யமாக எழுதியிருந்தான். கடிதத்தை வாசிக்க வாசிக்க சரசுவுக்கு மனதில் சந்தோசமாகவும் சிலசில இடங்களில் வெட்கமாகவும் சிரிப்பாகவும் இருந்தது. கடிதத்தை முற்றாகப் படித்து விட்டு மீண்டும் ஓரிரு தடவைகள் படிக்க வேண்டுமெனபதற்காக மெதுவாக மடித்து நெஞ்சுச்சட்டைக்குள் சொருகிக் கொண்டாள். பின்பு மகனையும் தூக்கிக் கொண்டு போய் புட்டுக் குழைத்துத் தீத்துவதற்கு ஆயத்தமானாள்.

ஈழ மண்ணில் தமிழ் மக்கள் உறும் அவலங்களை கேள்வியுற்று கவலைகள் தெரிவித்து. கவலை தாங்க முடியாது 'நேசக்கரம்' நீட்டிக் கொண்டு வந்த இந்திய அரசின் சிப்பாய்கள் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் காவல் காத்துக் கொண்டு நின்றார்கள். சில சிப்பாய்கள் வீட்டு வளவுக்குள்ளும் நுழைந்து கிணற்றடியிலும் வீட்டிற்குப் பின்புறத்திலும் குசினிக்கு முன்புமாக அதாவது பெண்களின் நடமாட்டம் கூடிய இடங்களிலும் 'காவல்' காத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த இந்திய சிப்பாய்களுக்கு 'உதவி' புரிவதற்காக ஈழ மண்ணில் தோன்றிய சில இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் அவர்களோடு ஆயுதங்கள் ஏந்திய வண்ணம் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

சரசுவின் வீட்டு வளவுக்குள்ளும் ஒரு சிப்பாய் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

சரசு தனது மகனுக்குப் புட்டைத் தீத்திக் கொண்டிருந்தாள். ஆனால் முகுந்தனோ தான் அந்தப் புட்டை அள்ளிச் சாப்பிட வேண்டுமென்று அடம் பிடித்தான். சரசு அவனையே அள்ளிச்சாப்பிட விட்டு விட்டாள்.

சரசுக்கு தனது கணவன் ரகுநாதனிடமிருந்து வந்த கடிதத்தை இன்னொருதடவை படிக்க வேண்டும் போல் இருந்தது. அந்த ஆசை மனதிற்குள் இருந்து அரித்துக் கொண்டிருந்தது. அவள் மெதுவாக நெஞ்சுச் சட்டைக்குள் கையை விட்டு கடிதத்தை மீண்டும் ஒருதடவை படிக்கத் தொடங்கினாள். இடைக்கிடை குசினிக்குள் காகம் வந்து விடுமோவென்று தனது பார்வையை குசினி வாசற் பக்கமும் மகன் முகுந்தன் பக்கமும் விழுத்தத்தவறவில்லை. கடிதத்தை வரிக்கு வரி மிகவும் சந்தோசமாகப் படித்துக் கொண்டிருந்தாள்.

சரசுவின் வீட்டில் அப்பொழுதுஅவளதுமைத்துனி பூமணி மட்டுமே இருந்தாள். அவளும் இரண்டு வீடு தள்ளியிருக்கும் ரீச்சர் வீட்டிற்கு முருங்கைக்காய் வாங்கச் சென்று விட்டாள்.

திடீரென்று சரசுவின் கையை முரட்டுக்கரமொன்று பற்றியது. இன்னொரு கரத்தில் நூறு ரூபாய் இருந்தது. சரசு நிமிர்ந்து பார்த்தாள். அது 'நேசக்கரங்களை' நீட்டி 'அன்பு வழியில்' வந்த இந்திய சிப்பாயின் மோசக்கரம்.

'இம் – இந்தாபிடி சம்மதம் தானே' என்று கேட்பது போல அவனின் தலை ஆடியது சரசு திடீரென்று எழுந்து கையை உதறித் தள்ளிவிட்டு தனது மகன் முகுந்தனையும் தூக்கிக்கொண்டு குசினிக்கு வெளியே பாய்ந்துவந்து வீட்டுக்கு வெளியேயும் ஏன் வீதிக்கே ஓடிவந்து விட்டாள். அவளுக்கு இருதயம் 'படக்' 'படக்' என்று அடித்தது. அவளுக்குக் கோபம் ஒருபுறம். ஆத்திரம் ஒருபுறமாக விம்மலோடு அழுகையும் வந்தது.

அவளது வீட்டுக்கு வெளியே இந்திய சிப்பாய்களுக்கு 'உதவி'க்கு நின்ற இயக்க 'வீரர்'களின் தலைவனும் அவனது சகாக்களும் நின்றார்கள். சரசுவுக்கு அவர்களைக் கண்டதும் ஏதோ ஒரு உணர்வு மனத்தில் பட்டது தன்னைக் காப்பாற்ற வந்த ஈழமண்ணின் 'நல்ல சமாரித்தன்'கள் என அவள் நம்பினாள்.

தனக்கு நடந்ததை ஆத்திரம் மேலெழ விசும்பலுக்கிடையே சொல்லி முடித்தாள். தனக்கு நடந்ததைக்கேட்டதும் 'இவர்களுக்கு' ஆவேசம் பிறக்குமென அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அந்தக் கூட்டத்தின் தலைவனோ

'எடியே அவங்கள் இந்தியாவிலை இருந்து வந்து எங்களுக்காக எத்தனையோ தியாகங்களைச் செய்து கொண்டிருக்கிறாங்கள்... அவனுக்காக ஒருக்கா அவனோடை போனா என்னடி...? ஏதோ உன்னை சும்மாவே கேட்டவன்... காசுக்குத் தானே...''

சரசு இதைக்கேட்டு அதிர்ந்து போனாள். அவள் கேட்டாள்

' உனக்கொரு சகோதரி இருந்தால் இப்படி நடக்க விட்டுடுவியா...?''

''எடியே நாங்கள் இயக்கத்திலை சேர்ந்த நாளிலையிருந்தே எங்களுக்கு தாய், சகோதரம் இல்லை மறந்துபோனம்... எங்களுக்கு சகோதரமும் ஒண்டுதான் மற்றவையும் ஒண்டுதான்... எப்பவாவது நீ நூறு ரூபாயைக் கண்டிருப்பியாடி ...?'' அவன் இன்னும் எத்தனையோ வெல்லாம் சொன்னான். சரசு அவ்விடத்தில் நிற்காது தனது மைத்துனியைத் தேடி மாஸ்டரின் வீட்டிற்கு ஓடினாள்.

சரசுவிற்கு அன்று முழுக்க நித்திரை வரவில்லை. அவளுக்குஇரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. ஈழ மண்ணையும் மக்களையும் காப்பாற்ற ஆயுதம் ஏந்திய ஒரு இளைஞனுக்கு இப்படி ஒரு கேவலமான இந்தனையா? இந்திச் சிப்பாய்க்குதனது நம்பிக்கையைக் காட்ட இப்படிக் கீழ்த்தரமான எண்ணமா உண்மையில் இந்த மண்ணிலிருந்து அழிக்கப்பட வேண்டியவர்கள் இப்படியான கேவலம் கெட்டவர்களே...''

அவளது மனதில் திடமானதொரு முடிவு ஒன்று வந்து நின்றது. அந்தமுடிவுக்குத்தான் கட்டாயம் கட்டுப்பட்டாக வேண்டுமென்று அவள் சத்தியம் செய்து கொண்டாள்

எரிந்து கொண்டிருந்த விளக்கை அடித்து அணைத்தாள் தனது மகனை இறுகக்கட்டிப் பிடித்துக் கொண்டு உறங்க எத்தனித்தாள்.

பாடசாலைப் பிள்ளைகளை வலுக்கட்டாயமாகப் பிடித்துக் கொண்டு போய் இராணுவத்தில் சேர்க்கும் குழுவின் தலைவன் கண்ணிவெடியில் சிக்கி மாண்டு போனதற்காக அன்று 'துக்கதினம்' அனுஷ்டிக்க வேண்டுமென்றும் வாழை தோரணம் கறுப்புக் கொடி கட்ட வேண்டும் என்றும் 'கட்டளை'யிடப்பட்டது.

இந்திய ஜவானுக்கு சரசுவைத் தனது உடலை விற்கச் சொன்ன இந்த 'தீரமிகு' தலைவன்தான் அந்த வீதிச் சோடனைக்குப் பொறுப்பாக இருந்தான். மதியான வேளை அந்த வீதியில் கறுப்புக் கொடி, தோரணம்வாழை முதலியன கட்டப்பட்டுள்ளனவா என ஒவ்வொரு வீடு வீடாகப் பார்த்துக் கொண்டு வந்தான் அந்தத் தலைவன்.

சரசு வீட்டில்கறுத்தக்கொடி ஏற்றப்படவில்லை. வாழை, தோரணம் கட்டப்படவில்லை சரசு மனத்தில் ஒரு திடமான முடிவு எடுத்திருந்தாள்.

வீடு வீடாகப் பார்த்துக் கொண்டுவந்த அந்தத்தலைவன் சரசுவின் வீட்டுக்கு முன்பாக வந்து நின்று இடுப்பில் கை வைத்த வண்ணம் மேலே பார்த்தான். ஒன்றுமே நடைபெறவில்லை.

படலையில் தட்டினான். ஒருவரும் வெளியே வரவில்லை மீண்டும் பலமுறை பலமாகத்தட்டினான். சற்றுத் தாமதித்து சரசு வெளியே வந்தாள்.

''ஏன் கறுப்புக் கொடி வாழை தோரணம் ஒண்டும் கட்டேல்லை''

''வாழை தோரணம் கட்ட ஆம்பிளை வீட்டிலை இல்லை'

''கறுத்தக் கொடி?'' கறுப்புச்சிலை வீட்டுக்கை கிடக்கு...

'அப்ப ஏன் கட்டேல்லை.?

''நான் உங்களுக்கை போகமாட்டன்...?''

அவன் தனது இயந்திரத் துப்பாக்கியை தோளில் மாட்டியபடி வீட்டிற்குள் நுழைந்தான். சரசு மெல்ல மெல்ல பின்னே சென்றாள். நாரியில் இருந்த முகுந்தனை முற்றத்தில் இறக்கி விட்டாள்.

இவனோடு வந்த மற்றவர்கள் சற்று முன்னே போய்க் கொண்டிருந்தார்கள்.

வீட்டிற்குள் ஒரு அலறல் சத்தம் கேட்டது. அந்தத் தலைவன் தலைகுப்புறக்கிடந்தான். மண்டை வெடித்து இரத்தம்ஆறாய் ஓடிக்கொண்டிருந்தது.

இரத்தம் தோய்ந்த இரும்புக்கம்பியோடு அவள்வெளியே வந்தாள்.

''இந்தியாக்காரனுக் கெண்டால்சகோதரியையும் கொடுக்கத்தயங்காத போக்கிலிச்சாதி ... சீ - துப் .... உங்களுக்கு ஒரு இயக்கம் ... நீங்களும் ஒரு போராளிகள் ... '' — குப்புறக்கிடந்தவன் மீது காறித்துப்பி விட்டு இரும்புக்கம்பியை கூரைக்கு மேல் விசி எறிந்தாள்.

சேலையை மாற்றிக் கொண்டு பிள்ளையைத் தூக்கினாள். அவளது கையில் சிறு பொட்டணி இருந்தது. அவள் எங்கோ சென்று மறைந்து கொண்டிருந்தாள்.

மனத்தில் ஏதோ ஒரு பாரிய சுமை இறங்கியதால் சுகம் தெரிந்தது அவளுக்கு.

அவளின் வீடு அடுத்த நாள் எரிந்து சாம்பல் மேடாய் கிடந்தது. அவளை இந்திய இராணுவம் இந்த மண்ணை விட்டுப் போன இறுதி நாள் வரை தேடிக்கொண்டே இருந்தது.


கவிதை

## மரணங்களையும் வெல்வோம்!

நேற்றைய தினம்...
சிதைக்கப்பட்ட எம் உணர்வுகளைச்
சீர்படுத்திக் கொள்வதற்காய்...
நிஷ்டூரமிக்க அந்த முகங்களை
நினைவிலிருந்து அகற்றிக் கொள்வோம்!
எமது

காயங்களில் இருந்து வடிகின்ற
குருதித் துளிகள் உலர்ந்து போகட்டும்!

தேசமே சிதைந்து கொண்டிருக்கையில்
தேவையற்ற திசைகளில் தேடுதலா?
வேண்டாம்... வேண்டாம்...

மிதக்கின்ற முகில்களையும்
பறக்கின்ற குருவிகளையும்
தாவிவந்து மரஞ்செடிகளை
தழுவுகின்ற தென்றலையும்
மனங்குளிர நேசிப்போம்!

அவற்றின்,
மௌனப் பேச்சுக்களை
மொழிபெயர்த்துக் கொள்வோம்!

நாளைய சந்ததிக்கு
நம்பிக்கை உணர்வளித்து
நமக்காய் ஓருலகைச் சிருஷ்டிப்போம்!

எங்கள்,
பஞ்சுப் பாதங்களே துயரப்
பாறைகளை மிதித்துத் தகர்க்கட்டும்!

எட்டாத மலையின் உச்சியாய்
எங்களுக்கு உரைக்கப்பட்ட
சுதந்திரத்தை நாங்கள் சுவீகரிப்போம்!

நாங்கள்,
புதியதலை முறைகள், எனவே
புதைந்து போகக் கூடாது!
மனித மனங்களுக்குள்
முடங்கிக் கிடக்கின்ற
மானுடத்தை விடுவிப்போம்!
அதற்காய்...
மரணங்களையும் வெல்வோம்!

ஆதிலட்சுமி இராசையா

# முத்தமிழ் விழா

பண்பாட்டுப் பாரம்பரியம் மிக்கவர்கள் தமிழர்கள் முடியுடைவேந்தர்கள் தமிழ் நாட்டை ஆண்டபோது கலைச் சிறப்பும் ஆட்சி மேம்பாடும் தமிழ் நாட்டில் நிலவின தமிழ் நாட்டிலே இயல்தமிழ்-இசைத் தமிழ் நாடகத்தமிழ் ஆகிய முத்தமிழ்வல்லாரும் தமிழர் பண்பாட்டினை வளர்த்து வந்திருக்கின்றனர். பூம்புகாரிலே முத்தமிழ்விழா நடந்தமை பற்றி சிலப்பதிகாரம் சிறப்பாக வர்ணிக்கின்றது. பண்டை நாளில் தமிழர் தம் கலைப் பாரம்பரியத்தை விழா எடுத்துச் சிறப்பித்தனர் சோழ மன்னர் அர்தப்பண்பாட்டு விழாக்களின் மூலம் தமிழர் பண்பாட்டு எழுச்சி பெற்றவர்களாகத் தம் கலைகளைப் பேணி வந்திருக்கின்றார்கள் எனவே விழாக்கள் மக்களுக்கு எழுச்சியூட்டுகின்றன என்பது அறியப்படுகிறது.

தமிழீழத்தில் வாழும்மக்கள் இன்று சொல்லொணாத் துயரங்களில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது உண்மை. ஆனால்,

''நப் நாடுதமிழ்நாடு இதிலே -ஒரு நாடுண்டு நாமெல்லாம் உண்டுதொன்மைசோ வரலாறும் உண்டு- மலைத்தோளுண்டு ஆட்சிதான் இல்லை'' (காசிஆனந்தன்) எனவே தம் கலைகளும்- மொழியும் சுதந்திரமாக-வளமாக வளரவேண்டுமானால் சுதந்திரமான ஓர் அரசு வேண்டும். அத்தகையதொரு சுதந்திர அரசு நிறுவுவதற்கு மக்களை எழுச்சியூட்ட- மக்களுக்குத் தன்னிலைமையை யுணர்த்த இத்தகைய விழாக்கள் மிகமிக இன்றியமையாதவை ஆகும்.

உலகத்தொழிலாளர் அனைவரும் ஒன்றிணைந்து ஆண்டுதோறும் மே மாதம் முதலாந்திகதி மேதின விழாக் கொண்டாடுகின்றார்கள்.

இவ் விழாக்களில் இடம் பெறும் மாபெரும் ஊர்வலங்களும் கலை நிகழ்ச்சிகளும் உலகத்தொழிலாளர்களை ஒன்றுபடவைப்பதோடு, அவர்களுக்கு எழுச்சியூட்டுவனவாகும் இவ்வருடம் தமிழீழத்தில் நடைபெற்ற மேதின விழா ஊர்வலம் தமிழீழ மக்களுக்கு மண் மீட்பு போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக இருந்தமையைச் சுட்டிக் காட்டவேண்டும்.

சமய அடிப்படையில் நாம் பல விழாக்களைக் கொண்டாடுகின்றோம். தீபாவளித்திருநாள் / புதுவருட விழாக்கள் / நத்தார்பண்டிகை / தூய ஆவியின் பெயரால விழா / தைப் பொங்கல் விழா / நவராத்திரி, விழா- எனப் பல சமய விழாக்களைத் தமிழர்களாகிய நாம் கொண்டாடுகின்றோம். இவ் விழாக்கள் அனைத்தும் மக்களுக்குத் தத்தம் சமய அடிப்படையிலான நம்பிக்கைகளை யூட்டுவதோடு, அவர்களைச் சமயநடவடிக்கையில் ஈடுபடத் தூண்டுகின்றன

இவை போன்றே வெள்ளி விழா, மணிவிழா, நூற்றாண்டு விழா. திறப்புவிழா, பிறந்த நாள்விழா, திருமணவிழா-என்பன தனிமனிதனையோ அல்லது குறிப்பிட்ட சமூகத்தையோ சிந்திக்கவைக்கின்றன நாம் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்பதற்கும் இப்பயணத்தில் நமது சாதனையை மதிப்பிடுவதற்கும் இத்தகு விழாக்கள் வழி வகுக்கின்றன அன்றியும் இவ்விழாக்கள் புதிய சிந்தனைகளைத் தருகின்றன. புதிய செயல் திட்டங்களை மேற்கொள்ளத் தூண்டுகின்றனவாக அமைகின்றன. இவ் விழாக்கள் எம்மை உரியவாறு இயங்க வைக்கின்றன.

ஈழத்தமிழ் மக்கள் தம்மை கலாசார நடவடிக்கைகளில் சோர்வுற்று, பண்பாட்டு உணர்வு இழந்து தேம்பிக்கிடக்கும் இந்நாளில்,

''உலகத்தமிழினமே எண்ணிப் பார்' நீ- உறங்கினால் வரலாற்றில் யார் உன்னை மன்னிப்பார்''-என்று உலகத்தமிழினத்திற்கு அறைகூவல் செய்து இன்று தமிழீழப்பிரதேசத்தில் முத்தமிழ்விழா கொண்டாடப் படுகிறது. இவ்விழா நாம் ஒவ்வொருவரும் பரணி பாடுவதற்கு தீர்க்க தரிசனமாக அமைகின்றது என்றால் மிகையாகாது

ஈழத் தமிழர்களாகிய நாம் உலகக் கலை அரங்கிலே உயர்ந்து நிற்க வேண்டுமானால் முதலில் அதற்கு வேண்டியதொரு களத்தைச் சுதந்திரமாக அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் எமது கலைகளும் சுதந்திரமான முறையில் சுபீட்சமாக வளர வாய்ப்புண்டு. ஈழத்தமிழ் மக்களின் கலை வடிவமாகத் திகழும் ''நாட்டார் கூத்து''

கலாநிதி.
இ. பாலசுந்தரம்

பாரம்பரிய வடிவமாகப் பேணப்படுவதோடு இக்கலை வடிவத்தை ஆயுதமாகப்பயன்படுத்தி சமகால அரசியல் சமுதாய நடவடிக்கைகளுக்கும் பயன் படுத்த வேண்டும். இம் முயற்சி 'களத்தில் சாத்தான்' 'போர்மண்ணில் புனிதத்தாய்' 'கந்தன் கருணை' என்று நாட்டார் கூத்துக்களின் மூலம் சான்று காட்டப் பட்டுள்ளன.

இதுபோன்ற இசைத்தமிழும் இயல்தமிழும் சமகாலத்தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும். இத்துறை வல்லார்களை இந்த முத்தமிழ் விழா பயனுள்ள வகையில் திசை திருப்பும் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு.

கலை மக்களுக்குச் சொந்தமானது. கலைகள் பற்றியும் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவை மக்களின் உணர்வுகள், சிந்தனைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து அவற்றை உயர் மட்டத்திற்கு உயர்த்திச் செல்ல வேண்டும். அவ்வகையிலே முத்தமிழ் விழாவும் அமைந்துள்ளமை நல்லதோர் எதிர்காலத்தைக் காட்டுவதாக அமைகின்றது.

கலை இலட்சியப் படைப்பாவதும் உண்டு. கலை கலைக்காகவே என்ற மாயத் தன்மையும் உண்டு. ஆனால் கலையை, கலைகளைக் கொண்டமைந்த விழாக்களை வர்க்கப் போராட்ட, மண்மீட்புப் போராட்டக் கருவியாகவே நாம் நோக்குகின்றோம். கலைகளும் விழாக்களும் யதார்த்தத்தின் பிரதிபலிப்பாகும். எனவே கலைகளும் விழாக்களும் மக்களுக்கு உண்மைநிலைகளை உணர்த்தி அவர்களைச் சமகாலப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க அணிதிரட்ட வேண்டும். அந்த வகையில் இந்த முத்தமிழ் விழா முக்கியத்துவம் பெறுவதை மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தமிழ் பிரதேசத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் முத்தமிழ் விழா தமிழ் மக்களிடையே கலாசார விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி கலாசார புரட்சிக்கு வழிவகுக்க வேண்டும். ''நாம் தமிழர்'', 'நம் மொழி தமிழ்மொழி', 'நம் பண்பாடு தமிழ்ப் பண்பாடு', என்ற உணர்வுகளை மக்களுக்கு இவ்விழா ஏற்படுத்த வேண்டும் எனபதே எமது விருப்பம்.

# எய்ட்ஸ் (AIDS) நோயைப் பற்றிய சில அறிவுரைகள்

எய்ட்ஸ் என்பது மனிதனுடைய உடலில் இயற்கையாக காணப்படும் ''நோய்களை எதிர்க்கும் பாதுகாப்புத் தன்மையை'' (Immune System) படிப்படியாக முற்றாக அழிக்கின்ற ஒருவித புதிய நோயாகும். இது LAV, HTLV III என்கிற வைரசுக்களினாலேயே ஏற்படுகிறது. லுக்மொன்டாக்னியர்'' Luc Montagnier's Group) என்பவரின் குழுவினரே 1983ம் ஆண்டில் பாரீஸ் நகரத்திலுள்ள பாஸ்டர் நிறுவனத்தில் (Institute Pactcur in Paris) மேற்கொண்ட ஆராய்வின் போது இவ்வைரஸைக் கண்டுபிடித்தவர்களாவர். இவ்வாய்வினை தொடர்ந்து மேற்கொண்ட அமெரிக்காவின் பெத்தீஸ்டர் (Bethesda-Usa) நகரத்திலுள்ள தேசிய சுகாதார நிறுவனத்திலுள்ள (National Institute of Health In Bethesda டாக்டர் ரொபேட் ஹலோ (Dr. Robert Gallo) வும் சகாக்களும் ''எய்ட்ஸ்'' நோய்வந்தவர்களில் அதற்குக் காரணமான Htlv- III என்கிற இன்னுமொரு வைரஸைக் கண்டு பிடித்துள்ளார்கள்.

## ''எய்ட்ஸ்'' முதல் எங்கே தோன்றியது?

அமெரிக்காவுக்கு மிக அருகிலுள்ள ஹெயிட்டி (Haiti) என்கிற தீவிலிருந்தே இவ்வியாதி உருவாகியது என்று கருதப்படுகிறது. தன்னினச்சேர்க்கையில் (Homosexuals) ஈடுபாடுள்ளவர்களின் உல்லாசகளியாட்டங்களுக்கு இது மிகவும் பேர்போன இடமென்பதால் இங்குதான் இந்தவியாதி ஆரம்பித்ததென ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆனாலும் சகாராபாலைவனத்தின் (Sub Saharan) உபபகுதிகளில் அல்லது மத்திய ஆபிரிக்காவிலிருந்து தான் (Central Africa) இவ்வியாதி ஹெயிட்டி தீவுக்கு வந்திருக்கவேண்டுமென புதிய ஆராய்வாளர்கள் இப்போது கருதுகிறார்கள் ஏனெனில ''எய்ட்ஸ்'' என்றுகருதப்படும் வியாதிகளில் ஒன்றான கப்ஸோஸிஸ் சார்க்கோமா (Kaposi's Sarcoma) ஆபிரிக்கா நாட்டின் இளைஞர்களிடையே 1970ம் ஆண்டின் நடுப்பகுதியில் பலரிடம் காணப்பட்டதாகக் கருதப்படுகிறது ஆனாலும் அதற்குரிய சான்றுகளில் பல குறைபாடுகளும் பிழைகளும் இருப்பதால் அவற்றை ஊர்ஜிதமான சான்றுகளாகக் குறிப்பிட இயலாது என்றும் பலர் கருதுகிறார்கள். ஹெயிட்டி தீவுகளுக்கு அமெரிக்கர்களே பெரும்பாலும் உல்லாச விடுமுறையைக் கழிக்கச்செல்பவர்களாகையால் நியூயோர்க்சான் பிரான்ஸிஸ்கோ San Francisco லொஸ்ஏன்ஜலிஸ் போன்ற பிரபல நகரங்களில் 198ம் ஆண்டில் ஜூனுக்கும் நவம்பருக்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளிலேயே ஏறக்குறைய 159 பேருக்கு எயிட்ஸ் வியாதி ஏற்பட்டிருக்கிறது. இதிலும் 92 சதவீதமானவருக்கு பாலியல் உறவுசம்பந்தமாகவே வியாதி ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது எய்ட்ஸ் தொற்றியவர்களின் தொகை அதன் பின்னர் ஒவ்வொரு ஆறுமாதமும் இருமடங்காகி இன்று அமெரிக்காவில்மாத்திரம் ஏறக்குறைய நான்கு லட்சம் பேரும் இங்கிலாந்தில் பத்தாயிரம் பேரும் கனடாவில் பன்னீராயிரம் பேரும் இவ்வியாதியினால் அவஸ்தைப் படுகிறார்கள்.

## இந்தநோய் யாருக்கு எப்படி பரவுகிறது?

'தன்னினசசேர்க்கையிலீடுபடுபவர்களுக்கும், பலபெண்களுடன் தொடர்புள்ளவர்களுக்குமே இவ்வியாதி அதிகமேற்படுகிறது. அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில், கட்டுப்பாடற்ற பாலியல் உறவு முறைகளும், பெருவாரியான இரவு விடுதிகளுமே, அவர்களிடையே இக்கொடிய நோய், ஏற்படுவதற்குரிய அடிப்படைக் காரணமாகும். கட்டுப்பாடற்ற கலாசாரவாழ்வு வாழ்பவர்களுக்கு இயற்கையாகக் கிடைத்த தண்டனை இது என்றும் கூறலாம். மேலும் ஊசிமூலம் இந்தவியாதி ஏற்படும் அதாவது ஊசிமூலம் போதைவஸ்து பாவிப்பவர்கள் (Intravenous Drug Abusers) ஒரே ஊசியை (Needles) பலர் பாவிப்பதாலும், பாவிக்கப்படுகின்ற ஊசிகள் சுத்தமற்றவையாக (Unsterile) இருப்பதாலும் ஒருவருக்கு இந்தநோய் இருந்தால்போதும். அவர் பாவித்த ஊசியைப் பாவித்த அனைவருக்கும் 'எய்ட்ஸ்' நோய் ஏற்படும். மேலும் போதை வஸ்து பாவிப்பவர்கள்

டாக்டர் சீர்மாறன்

பலருடன் பாலியல் உறவில் (Multiple Partners) ஈடுபடுவதாலும் இந்நோய் பரவும் ஆபத்து அதிகமாகவே இருக்கிறது. 'எய்ட்ஸ்' நோய் உள்ளவர் அல்லது அந்நோய்க் கிருமிகளை கொண்டவர்கள் 'இரத்ததானம்' செய்து அந்த இரத்தம் இன்னொருவருக்கு கொடுக்கப்படுவதால் இந்த நோய் ஏற்படுகிறது. மேலும், 'எய்ட்ஸ்' நோயாளிக்குப்பாவிக்கப்பட்ட மருந்தூசிகள் அல்லது சத்திர சிகிச்சையின் போது அவருடைய 'இரத்தம், தவறுதலாக, இன்னொருவரின் காயங்களினாலேயோ (Accidental Inoculation) உள்ளே செல்லுமாயின் அவருக்கும் 'எய்டஸ்' நோய் ஏற்படும். கடைசியாக, 'எய்ட்ஸ் நோய் வந்த பெண் கர்ப்பமானாலோ அல்லது கர்ப்பமான பெண்ணுக்கு 'எய்ட்ஸ்' ஏற்பட்டாலோ அவளுடைய குழந்தைக்கு பிறப்பிலேயே 'எய்ட்ஸ்' நோய் ஏற்படும். இதனால்தான், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பல மேற்குலகநாடுகளில் 'எய்ட்ஸ்' நோய் வந்தவர்கள் இரத்ததானம் செய்யக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது. மேலும் சில முன்னெச்சரிக்கை காரணமாக அவர்களுடைய இரத்தம் முன்கூட்டியே 'எய்ட்ஸ்' நோய்க்கிருமிகளுக்காகப் பரிசோதிக்கப்படுகிறது. மேலும் 'எய்ட்ஸ்' நோய் ஏற்பட்டவர்கள். ஆஸ்பத்திரிகளில் தனிமைப்படுத்தப்பட்டு (Isolation) மிகவும் ஜாக்கிரதையாக சிகிச்சையளிக்கப்படுகிறார்கள்.

## 'எய்ட்ஸ்' நோய் ஏற்பட்டால் எப்படி இருக்கும்?

'எய்ட்ஸ்' கிருமிகள், மனித உடலில் இயற்கையாகவுள்ள நோயை எதிர்க்கும் சக்தியை அழிப்பதால், உடலுக்குரிய சுயபாதுகாப்பு (Self- Defence) முற்றாக முறியடிக்கப்பட்டு விடும். அதன்பின்னர், சாதாரணமாக நோய்களை ஏற்படுத்தாத, காற்று, நீர் உணவு என்பவற்றில் காணப்படும் கிருமிகள், இவரில் நோய்களை ஏற்படுத்தும் உதாரணமாக காய்ச்சல் தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்குமேலிருக்கும். காரணமேதுமிருக்காத (Pyrexia of Unknown Origin -Puo) தொடர்ச்சியான வயிற்றோட்டம் (Chronic Diarrhoea) ஏறக்குறைய 10 வீதம் வரை உடல் நிறையில் குறைதல் ஈரல் மண்ணீரல் என்பன வீங்குதல் (Hepatosplenomegaly) நிணநீர்ச் சுரப்பிகள் வீங்குதல் (Lymphaden -opathy) உடல் இளைத்தும் அலுப்பாயுமிருத்தல் வாயில் புண்கள் ஏற்படுதல் போன்றவை இருக்கும். ஆய்வுகூடப் பரிசோதனையில் இரத்தத்திலுள்ள பல கலங்களில் மாற்றங்களிருக்கும்' 'எய்ட்ஸ்' நோய்க்குரிய கிருமிகளையும், கண்டுபிடிப்பதற்கு மேல் நாடுகளில் வசதிகளுண்டு.

## வராமலிருப்பதற்கு சில வழிகள்

எமது பகுதியிலுள்ள குடும்ப அமைப்பு, கலாசாரம், பண்பாடு அடிப்படையில் 'எய்ட்ஸ்' நோய் ஏற்படும் ஆபத்து இல்லை என்றே கூறவேண்டும். ஆனாலும் வெளிநாடுகளில் பெருமளவில் இருக்கும் எமது இளைஞர்கள் சிலரின் கட்டுப்பாடற்ற பழக்கவழக்கத்தினால், யாருக்காவது இந்த வியாதி ஏற்பட்டிருப்பின் அவர் இங்குவந்து திருமணம் செய்தாலோ அல்லது யாருடனும் உறவுகொண்டாலோ இந்தவியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது. கொழும்பிலும் கிக்கடுவ போன்ற வெளிநாட்டு உல்லாச விடுமுறைக்கு பேர்போன இடங்களிலும் ஏற்கனவே ஒரு சிலருக்கு 'எய்ட்ஸ் தொற்றியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது மேலும் கொழும்பில் விபச்சார விடுதிகளும் கட்டுப்பாடற்ற பாலியல் உறவு முறைகளும் போதைவஸ்துகளை ஊசிமூலம் எடுத்தல் போன்ற பழக்க வழக்கங்கள் பெருகிக் கொண்டுவருவதாலும் வெளிநாட்டவர் பலர் வந்து போவதாலும் கொழும்பில் 'எய்ட்ஸ்' பெருமளவில் ஏற்படும் ஆபத்து வெகுதூரத்தில் இல்லை. சிலநாடுகளுக்குள் புகமுன்னர் உதாரணமாக சிங்கப்பூர் சில மத்தியகிழக்கு நாடுகள் 'எய்ட்ஸ்' நோய்க்கான பரிசோதனை செய்யும் பழக்கமும் வசதியும் நடைமுறையில் உள்ளது. ஆனால் இலங்கையில் அதற்கான வசதியோ பணமோ இல்லை: எனவே வெளியிலிருந்து 'எய்ட்ஸ்' நோயுடன் வருபவரை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பது மிகவும் கடினமானஒன்று ஆகவே இங்கே இருப்பவர்கள் தான் முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் அதாவது, பலருடன் பாலியல் உறவுகளில் ஈடுபடுதல் ஊசிமூலம் போதைவஸ்துகளைப் பாவித்தல், 'எய்ட்ஸ்' நோய்க்குரிய சந்தேகமோ, அறிகுறிகளோ இருந்தால் இரத்ததானம் செய்தல் போன்றவற்றை தாமாக தடை செய்யவேண்டும் அல்லது நடைமுறையில் தடைசெய்யப்படவேண்டும். எவ்வளவுதான் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வளர்ந்தாலும் இப்படியான வியாதிகளால் மனிதகுலமே சீரழிவதைவிட எமது பண்பாட்டினடிப்படையில் ஒருவனுக்கு ஒருத்தி, என்று வாழ்வதே உண்மையான மேன்பாட்டைத் தரும்.

# இந்தியாவின் அமெரிக்க சாய்வு

"இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை அணி சாராக் கொள்கையாக இருக்கக் கூடாது" என்று பாரதீய ஜனதாக்கட்சி இத்தேர்தலின் போது முன்வைத்துள்ளது. இக்கட்சி அமெரிக்க சார்புக் கொள்கையையே தனது முழு மூச்சாகக் கொண்டுள்ளது.

மாறியுள்ள உலக அரசியல் சூழலில் இந்தியாவும் அதற்கு ஏற்ப பொருத்தமான வெளியுறவுக் கொள்கையை வகுப்பது தவிர்க்கமுடியாததுதான். ஆயினும் அவ்வெளியுறவுக் கொள்கை எவ்வாறு அமையப் போகின்றது என்பது இங்கு விவாதத்திற்குரிய விடயமாகும்.

மாறியுள்ள உலக சூழலில் அமெரிக்கா உலக அரசியலில் தலைமைஸ்தானத்திற்கு வந்துள்ளது. ஆதலினால் அமெரிக்காவைக் கருத்திலெடுக்காது எந்த ஒரு நாடும் தனது வெளியுறவுக் கொள்கையை வகுத்துக் கொள்ள முடியாது. உலகின் பெரும் அரசுகளாக உள்ள சோவியத் யூனியனும் சீனாவும் கூட அமெரிக்காவின் அனுசரணையில்லாமல், அமெரிக்காவின் உதவியில்லாமல் உள்நாட்டு ரீதியாகவோ, வெளிநாட்டு ரீதியாகவோ தமது தேவைகளை நிறைவேற்ற முடியாது என்றநிலை ஏற்பட்டுள்ளது.

அதாவது பாகிஸ்தானுக்கு சீனாவழங்கும் ஏவுகணைகளை சீனா நிறுத்தாது விட்டால் நவீன தொழில்நுட்ப சாதனங்களைச் சீனாவுக்கு வழங்குவதைத்தான் நிறுத்த வேண்டிவரும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது. இதே போல சோவியத் யூனியன் தனது பொருளாதாரத்திட்டத்திற்கென 5000 கோடி டாலர்களை மேற்குலகிடம் கடனாகக் கேட்டு அமெரிக்காவிடம் கையேந்தியுள்ளது. ஆகவே தேவைகளின் நிமித்தம் அமெரிக்காவை சோவியத்தாலோ சீனாவாலோ மீற முடியாதுள்ளது.

இந்நிலையில் இந்தியாவின் பொருளாதாரப் பிரச்சினையும் உள்நாட்டு நெருக்கடிகளையும் கருத்திலெடுக்கும் போது அதனது வெளியுறவுக் கொள்கையை எவ்வாறு அமைக்க முடியும் என்று எதிர்வு கூறுவது கடினமான காரியமல்ல. தற்போது விலைவாசிகள் இந்தியாவில் அதிகரித்துள்ளது. உள்நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை ஏற்பட்டுள்ளது. தனிநாட்டுக் கோரிக்கைகள், இனப்பிரச்சினைகள் வலுவடைந்துள்ளன. எனவே இவை அனைத்துக்கும் தீர்வு காணக்கூடியவகையில் புதிய வெளியுறவுக் கொள்கையை வகுப்பது இந்தியாவுக்கு அவசியப்படுகிறது.

இச்சூழலில் பாரதீய ஜனதா மட்டுமே அமெரிக்க சார்புக் கொள்கையைப் பிரகடனப் படுத்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியுறவுக் கொள்கையைப் பிரகடனப் படுத்தியுள்ளதெனலாம். இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் தேசிய முன்னணிக்கும் இதன் யதார்த்தம் விளங்காமல் இல்லை. ஆனால் வெளிப்படையாகத்தம்மை அமெரிக்கா சார்பாகப் பிரகடனப் படுத்த அவர்கள் தயங்குகிறார்கள், ஓரளவு வெட்கப்படுகிறார்கள்.

இங்ஙனம் தனிமனிதர்களது விருப்பு வெறுப்புக்களையும் பிரகடனங்களையும் தவிர்த்து யதார்த்தத்தைப் பரிசீலனை செய்வோம். இந்தியா இராணுவரீதியாக சோவியத் சார்புக்கொள்கையைப் பெருமளவு கடைப் பிடித்து வந்த நாடாக இருந்தது. தற்போது சோவியத்தின் அணி குலைந்துள்ளதால் இதுவரை காலமும் இருந்துவந்த சோவியத் சார்புத்தன்மை – இதுவரை காலமும் இருந்துவந்த அளவில் பிரயோசனமுள்ளதாக இருக்கும் என்று இல்லை. அதைவிட்டு சோவியத் சார்புத்தன்மையை விட்டு அமெரிக்க சார்புத் தன்மையை எடுக்குமானால் சோவியத் இந்தியாவிற்கு எதிராகச் செயற்படும் என்றும் இல்லை. ஏனெனில் ஒருபுறத்தில், சோவியத்திற்கு அருகில் சீனாவும் மறுபுறத்தில்மதரீதியாகப் பாகிஸ்தானுடன் இணைந்து விடக்கூடிய ஆப்கானிஸ்தானும் உள்ளது,

ஆனால் இந்தியா சோவியத்திற்கருகில் இல்லாதது ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய இரு அரசுகளையும் கடந்து இருப்பதுடன் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் சோவியத் அச்சமுறும் பாகிஸ்தானுக்கும், சீனாவுக்கும் அருகில் இந்தியா இருக்கின்றது. ஆதலினால் இந்தியா பலமுடன் இருப்பது சோவியத்திற்கு லாபகரமானது. அதா

(7ஆம் பக்கம் பார்க்க)

சாரணன்


யாழ்ப்பாணத்தில்..........

தமிழீழ விடுதலைப் புலிகளின்

கலை, பண்பாட்டுக் கழகத்தினரால்

நடாத்தப் பெறும்



முத்தமிழ் விழா



கண்டு அகமகிழும்

நகை வியாபாரிகள், ஊழியர்கள்



தங்கள் நல்வாழ்த்துக்களை

தெரிவித்துக் கொள்கின்றனர்.

எங்கள் வாழ்வும் வளமும் மங்காத புகழ்

"தமிழ்"

என்று சங்கே முழங்கு.

(B/2659)

# தமிழீழத்தின் அரும் பொருள்

தேடிப்பெறமுடியாத அரும் பொருள்கள் மற்றும் தொல் பொருட்கள், கையெழுத்துப் பிரதிகள், ஆயுர்வேத மருத்துவக் குறிப்புக்கள் போன்ற பல்வேறு விடயங்களைச் சேகரித்து, தமிழீழத்தின் அரும் பொருட்காட்சியகத்தைத் தானே தனித்து உருவாக்கிடத் திடம்பூண்ட திரு. கலைஞானி அவர்களை அவரது

நான்கு பெண் சகோதரிகள் எனக்கு உடன் பிறப்பினர். ஆறுமாத காலத்திலேயே தந்தையை இழந்தேன். பன்னிரண்டு வயதுப் பராயத்தில் தாயையும் இழந்தேன். பெரிய தாயாரின் அரவணைப்பிலேயே வளர்ந்தேன். சோகத்தில் பிறந்த எனது சொந்த வாழ்க்கை அம்பலத்திற்கு வருவது அநாவசியம் என்றே

நிகழ்ச்சியில் எனது சேகரிப்பான நாணயங்களையும் பழைய முத்திரைகளையும் காட்சிக்கு வைத்தேன். தேசாதிபதி அதனைப் பார்த்துவிட்டு சென்றதும் நாணயங்களுக்கும் முத்திரைகளுக்குமாக இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டன. அது முதல் Antiques எனப்படும் தொல் பொருள் மற்றும் அரும்



# திரு. கலைஞானியுடன் ஒரு சந்திப்பு

இருப்பிடத்தில் சந்தித்தோம்:

காற்றிலாடும் வெள்ளைத் தலைமுடியும், ஒற்றை நாலு முழவேட்டியுமாக தமது கருமத்திலே கண்ணாக இருந்தார். பல்வேறு விதமான தொல் பொருட்கள் கண்ணாடித் துண்டுகள், கண்ணாடிப் பெட்டிகள் என்டன நாலாபுறமும் இடக்க உறக்கமின்றி உழைக்கும் இந்த மாமனிதனை ஈழநாதத்தின் சார்பாக சந்தித்தோம். அவருடன் நாம் செலவிட்ட சுமார் ஒரு மணிநேரப் பொழுதில் தெரிந்து கொண்ட சில விடயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம். ஈழநாதத்தின் சார்பாக சந்திக்க வந்துள்ளோம் எனக்கூறி அறிமுகம் செய்ததும் அங்கிருந்த இரு நாற்காலிகளையும் காட்டி எம்மை அமரும்படி கூறியவர் தாம் நின்று கொண்டே எமது கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயாரானார்.

ஐயா, உங்களின் முழுப் பெயர் பிறந்த இடம், சொந்த ஊர் போன்ற விபரங்களைக் கூறமுடியுமா?

எனது சொந்தப் பெயரையோ, சொந்த இடத்தையோ அல்லது தனிப்பட்ட விபரங்களையோ நான் பகிரங்கப்படுத்த விரும்பவில்லை.

கருதுகிறேன்.

அரும் பொருள் மற்றும் தொல்பொருள்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் தங்களை ஈடுபடுத்த தூண்டிய விடயங்கள் என்ன? அடுத்த கேள்விக்கு தாவினோம்.

1947ஆம் ஆண்டு மாசிமாதம் 23 ஆம் திகதி பாடசாலை மாணவனாக இருந்த எனக்கு சித்திர ஆசிரியர் திரு கந்தையா சரியாகப் படிக்கிறதில்லை என்பதற்காகத் தண்டித்தார். அத் தண்டனையின் தழும்புகள் முதுகுப் புறத்தில் படிந்திருந்தன. அவற்றை பெரிய ஆச்சியோ அல்லது வீட்டிலுள்ளவர்களோ கண்டுவிடக்கூடாது என்பதற்காக துவாய்த்துண்டு ஒன்றினால் முதுகைப் போர்த்தியபடி கிணற்றடியில் மரங்களின் அடியில் கிண்டிக் கிளறிக் கொண்டிருந்தேன். அப்போது மூன்று காசுகளும், ஒரு சங்கும் என் கண்ணில்பட்டது. அதனை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டேன். அதே ஆண்டு ஆடி மாதம் நான் படித்த யூனியன் கல்லூரிக்கு தேசாதிபதி (கவர்ணர் ஜெனரல்) அவர்கள் கார்னிவேல் ஒன்றுக்காக வந்திருந்தார். அதையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சி

பொருட்களை சேர்க்கலானேன்.

இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கிய இடர்பாடுகளைப் பற்றிக் கூறமுடியுமா? என்றதும்,

திரு. ரகுபதி தலைமையில் சிறாக நடைபெற்றது என்று சொல்லலாம். ஆனால் மண்ணித்தலை அகழ்வாராய்வு தொடர்பாக சில கருத்து வேறுபாடுகளுண்டு கந்த

> 1990ஆம் ஆண்டிற்கான தமிழீழ தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மாமனிதர்களை நேரில் சந்தித்து உரையாடியவற்றிலிருந்து கிடைத்துக் கொண்ட விடயங்களை இங்கே உங்கள் முன்வைக்கின்றோம். இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்ட பின்னர் சிறிலங்கா அரசுடனான யுத்தம் ஆரம்பித்து சரியாக ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில், முத்தமிழ் விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரன் இத்தேசிய விருதுகளை நேரில் வழங்கிக் கௌரவித்தமை தெரிந்ததே.
>
> அரும்பொருள், தொல்பொருட் பாதுகாப்பு துறைக்காக தமது உழைப்பு முழுவதையும் செலவிட்டு வரும் திரு. கலைஞானி அவர்களுடனான சந்திப்பில் நிகழ்ந்த உரையாடல் பற்றி இங்கே காணலாம்.

தாராளமாக எனக் கூறியவர், நிறைய சம்பவங்களை அடுக்கத் தொடங்கினார். 230 தரம் ஷெல்லடிக்கும், ஏழுமுறை விமானக் குண்டு வீச்சுக்கும் யாழ்ப்பாண நகரம் இலக்காகிய 1986 ஆம் ஆண்டின் ஒரு நாளில் எனது சொத்துக்கள் அனைத்தையும் பாதுகாப்பிற்காக குரும்பசிட்டிப் பகுதியிலுள்ள ஒரு வீட்டிற்கு மாற்றினேன் ஏழு லொறிகளில் ஏற்றப்படக் கூடிய அவ்வளவு பொருள்களும், சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்டன 1961 ஆம் ஆண்டின் சத்தியாக் கிரகம் உட்படப் பல அரிய ஆவணங்கள், பொருட்கள் இவ்வாறு சிதைக்கப்பட்டவற்றில் அடங்கும். கோயில்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், இடப்பெயர் ஆய்வு சம்பந்தமான தொகுப்புகள் எனப்பல அழிந்து போயின. இதைவிட தங்குவதற்கு இடமில்லாமலிருந்த குருணாகலைச் சிங்களவன் ஒருவனுக்கு தங்க இடம் கொடுத்ததால் அவன் பல பெறுமதி மிக்க பொருள்களைக் களவாடிச் சென்றான். இப்படிப் பலப்பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்கி நான் சேகரித்தவற்றில் சுமார் முப்பத்தைந்து சதவீதத்திற்கும் குறைவானவையே இப்போது எனது கையிருப்பிலுள்ளவை என்றார்.

மேலே உடல் முள்ளும். காலடியில் ஆணை நெருஞ்சி முள்ளும் குத்துகின்ற நடுக் காட்டினுள்ளே ஒவ்வொரு கற்களாக அடுக்கி முன்னேறிப் போய் சேகரித்த பொருள்களையும், படங்களையும் பார்த்தபோது அவரது உழைப்பின் மகத்துவம் துல்லியமாகப் புரிந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்த அரும்பொருட்காட்சியகம் உங்களுக்கு உதவியதா? எனக் கேட்ட போது இங்கிருந்த அரும் பொருட்காட்சியகத்திலிருந்த பொருட்களைக் கொழும்புக்கு அல்லது அநுராதபுரத்திற்கு மாற்றிவிடும்படி வந்த உத்தரவை ஞாபகப்படுத்திய அவர், அதனைத் தடுக்க தாம் எடுத்த முயற்சிகள் பற்றி விளக்கினார்.

யாழ்ப்பாணத்தில் அல்லது வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் பற்றி என்ன கருதுகின்றீர்கள் எனக் கேட்டபோது, ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சி

ரோடை அகழ்வாராய்வின் போது ஆராய்ச்சியாளர் முடிவுகளை வலிந்து பெற்றுக்கொண்டிருப்பதாகவே கருதுகிறேன் எனப் பதிலளித்தார்.

எமது வாசகர்களுக்கு தாங்கள் சொல்ல விரும்பும் விசேட செய்தி என்னவென வினவியபோது;

"இலங்கை முழுவதிலும் மட்டுமல்ல இந்தியா முழுவதையும் எடுத்தாலும் தனியார் சேகரிப்பு உங்களிடம் தான்கூட" என்று அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டிற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த "பொங்கு" பத்திரிகை ஆசிரியர் திரு. புலவர் இராசு சுட்டிக்காட்டியதை நினைவு கூர்ந்தார் மகிழ்ச்சியோடு; அத்துடன் தம் மேற்கொண்டிருக்கும் முயற்சிகளுக்கு விடுதலைப்புலிகள் இயக்கம், பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் தோள் கொடுத்து உதவுவதையும் நன்றியோடு எடுத்துக் கூறினார். மேலும் கொழும்பிலிருந்து தனிக்கார் வாடகைக்கு அமர்த்தி வந்திருந்த அமெரிக்கத் தம்பதியினர் ரூபா பதினைந்து இலட்சம் வரையில் விலை கேட்ட போதும் எமது நாட்டுப் பாரம்பரியம் ஈழத் தமிழகத்தை விட்டு வெளியே போகக்கூடாது என்பதற்காக கொடுக்கச் சம்மதிக்காததையும் பெருமையோடு சுட்டிக் காட்டினார்.

உங்களுடன் ஒத்துழைத்து தங்கள் உடல் உழைப்பை உதவ எவரும் முன்வந்துள்ளார்களா? என வினவிய போது.

உதட்டின் ஓரத்தில் சோகமான புன்னகை ஒன்றை நெளியவிட்டவாறே. கறையானும், தத்துவெட்டியானும் எலியும் தான் எனக்கு உறுதுணையாகின்றன எனப்பதிலளிக்க கேட்ட போது எமது உள்ளம் நொந்தது.

வருங்கால சந்ததிக்காக தாம் சேர்க்கும் இந்தச் செல்வத்தை மேலும் விரிவாக்கி, பக்குவமாகப் பாதுகாத்துக் கையளிக்கத் தாம் உறுதி பூண்டிருப்பதாக கூறும் கலைஞானியின் வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடையேயான இடைவெளியையும் காணமுடியவில்லை.

---

விடுதலைப் புலிகள்

கலை, பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும்

# முத்தமிழ் விழா

## ஒன்பதாம் நாள் நிகழ்ச்சி நிரல்

**இடம்:** யாழ்ப்பாணம் முற்றவெளி 'மாவீரர் கலை அரங்கம்'

**நாள்:** 14 - 06 - 1991 வெள்ளிக்கிழமை

**நேரம்:** பிற்பகல் 5. 30 மணி

★ மங்கள இசை:

நாதஸ்வரம்: திரு. எம். பி. பாலகிருஷ்ணன்
திரு. ஆர். கேதீஸ்வரன்

தவில்: திரு. ஏ. பாலசுதந்திரன்
திரு. ரீ. உதயசங்கர்
திரு. பீ. முருகதாஸ்

★ விடுதலைப் புலிகளின் திறப்புரை.

★ சிறப்புரை: சிவத்தமிழ்ச்செல்வி
பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

★ மேன்முறையீட்டு வழக்காடு மன்றம்
முதல்நாள் பட்டி மன்றத் தீர்ப்பை
எதிர்த்து வழக்கு

நீதிபதிகள்: வித்துவான் குமாரசாமி
திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்)
திரு. க. சிவராமலிங்கம்

1. பாதிப்புற்ற அணி மேன்முறையீடு
2. வென்ற அணி விளக்கம்
3. பட்டிமன்ற நடுவர் தீர்ப்புக்கான விளக்கம்
4. வழக்குத் தொடுப்போர் வாதம்
   தொடுப்போர்: திரு. இ. ஜெயராஜ்
   திரு. சி. சிவலிங்கராஜா
5. எதிர்ப்போர்வாதம்
   எதிர்ப்போர்: கலாநிதி. நா. சுப்பிரமணியன்
   திரு. பொன். கணேசமூர்த்தி

★ இசைக்கச்சேரி

திரு. எஸ். பத்மலிங்கம் - பாட்டு
செல்வன். பா. கண்ணன் - வயலின்
திரு. எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்
செல்வன் கே. கண்ணதாசன் - கடம்

★ நாடகம்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர்
வழங்கும்
"சகுனியர் மூவர்"

---

## இந்தியாவின்

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது சீனாவையும், பாகிஸ்தானையும் எதிர்கொள்ளக் கூடிய இந்தியா இருப்பது சோவியத்திற்கு சாதகமானது. இந்தவகையில் புவியியல் அரசியலின் பிரகாரம், சோவியத் யூனியனின் நிரந்தர நண்பனாகவே இந்தியா உள்ளது ஆதலினால் சோவியத்திலிருந்து இந்தியா விலகிச் சென்றாலும் இந்தியா பலவீனப்படுவதை சோவியத் விரும்பப்போவதில்லை. ஆதலினால் சோவியத்பற்றி இந்தியா அஞ்சவேண்டியதில்லை.

இந்தியாவுக்குள் ஏற்பட்டிருக்கும் இருபெரும் சிக்கல்களைப் போக்க அமெரிக்காவை நாடுவது இந்தியாவிற்கு நன்மைபயக்கக்கூடும் என இந்திய கொள்கை வகுப்பாளர்கள் கருதுவார்கள். அதாவது அமெரிக்க சார்புக் கொள்கையை வகுப்பதன் மூலம் பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளை எழவிடாது பார்ப்பது இலகுவாகும். தொழில்நுட்பம், நிதியுதவி என்பதன் பொருட்டும் அமெரிக்காவிடம் கையேந்துவதைத் தவிர இந்தியாவிற்கு வேறு வழியில்லை. ஆட்சிக்கு வருபவர்களும் இதை இலகுவான வழியாகப் பின்பற்றுவது சாத்தியம் என்றே கருதுகிறேன். ஆட்சியாளர்கள் உடனடி நலன்களிலேயே கவனம் செலுத்துவார்கள். அமெரிக்கா தனக்குத் தேவையான அளவு இந்தியாவின் கதவுகளை அகலத் திறப்பதற்காகச் சில நெருக்கடிகளை இந்தியாவிற்குக் கொடுக்கக்கூடும். அந்த நிலையில் அமெரிக்க சார்பான ஆட்சியாளர்களை விரும்புவார்கள். அவ்வாறு பார்க்கும்மிடத்து பாரதிய ஜனதா மட்டுமல்ல வேறு எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் அமெரிக்க சார்புக் கொள்கைக்குப் போவது தவிர்க்க முடியாமல் இடம்பெறும்.

நீண்டகால நோக்கில் அமெரிக்காவிற்கும் இந்தியாவின் நட்பு அவசியப்படுகிறது. சீனா, ஜப்பான், பாகிஸ்தான் போன்ற நாடுகளை எதிர்கொள்ள இந்தியா அமெரிக்காவுக்கு அவசியம். எனவே நீண்டகாலக் கண்ணோட்டத்தில் இந்திய-அமெரிக்க உறவு பற்றி சந்தேகப்பட எதுவுமில்லை. ஆனால் குறுங்காலத்தில் எத்தகைய ஓர் கட்டத்துக்கு ஊடாக, அமையப் போகின்றது என்பதே இங்குள்ள சிக்கல். இதனை ஆழமாக ஆராய்ந்தே ஓர் முடிவுக்கு வரவேண்டும். ஆயினும் பொதுப்படையான சில முடிவுகளுக்கு வரலாம்.

பாரதீய ஜனதா இந்திய அரசியலில் ஒரு பெரும் சக்தி என்பதிலே சந்தேகமில்லை. இந்திரா காங்கிரசோ அல்லது இந்திரா காங்கிரஸ் தலைமையிலான கூட்டரசாங்கமோ பதவியிலிருந்தாலும் கூட இந்தியாவின் உள்நாட்டு வெளிநாட்டுக்கொள்கை வகுப்பதில் பாரதீய ஜனதாவால் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்த முடியும், அது வெளியுறவுக் கொள்கை பொறுத்து அமெரிக்க சார்புத் தாக்கமே. இந்நிலையில் பதவிக்கு வருபவர்கள் யாராக இருந்தாலும் அமெரிக்க-பாரதீய ஜனதாக்கூட்டு தவிர்க்க முடியாமல் அமையலாம், ஆயினும் இவற்றின் அளவுகள் நுணுக்கமாக ஆராய்ந்து வெளிப்படுத்த வேண்டியவையாகும்.

---

## சுதாராஜிற்கு ரூபா 5,000 பரிசு

(நமது நிருபர்)

தமிழகத்திலிருந்து வெளியாகும் பிரபல வார சஞ்சிகையான "ஆனந்த விகடன்" தனது வைரவிழாவையொட்டி நடத்திய சிறுகதைப் போட்டியில் ஈழத்து எழுத்தாளர் சுதாராஜ் அவர்களுக்கு பரிசு கிடைத்துள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவசாமி ராஜசிங்கம் என்னும் இயற் பெயரையுடைய இவர் எழுதிய "அடைக்கலம்" என்னும் சிறுகதைக்கே ரூபா ஐயாயிரம் (இந்திய நாணயப் படி) பரிசு கிடைத்துள்ளது. இவர் சிரித்திரன் பண்ணையில் வளர்ந்த எழுத்தாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிடாச்சியில் கண்ணிவெடி; ட்ரக் முற்றாக சேதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் சென்ற ட்ரக் வண்டியொன்று விடுதலைப் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கியதில் முற்றாக சேதமடைந்தது. இதில் பயணம் செய்த இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை 9-58 மணியளவில் மன்னாரிலுள்ள கஜுவத்தை என்னுமிடத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் வாகனங்களிலும், கால் நடையாகவும் கிடாச்சி என்னுமிடத்திற்கு சென்றுகொண்டிருந்தனர்.

அச்சமயம் இனியாட்பாலம் என்னுமிடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் இராணுவத்தினர் சென்ற ட்ரக் வண்டியொன்று முற்றாகச் சேதமடைந்ததாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ட்ரக் வண்டியில் இருபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பயணம் செய்ததாக தெரிய வருகிறது இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை விபரம் இதுவரை கிடைக்கவில்லை.

## இராணுவம் சென்ற

# உழவு இயந்திரம் மீது கண்ணிவெடித் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் சென்ற உழவு இயந்திரம் மீது விடுதலைப்புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.50 மணியளவில் படுவான் கரைப் பகுதியிலுள்ள கொக்கட்டிச்சோலைப் பகுதியில் இச்சம்பவம் நடந்துள்ளது.

கொக்கட்டிச்சோலையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் ஆற்றங்கரையான மண்முனைக்கு உழவு இயந்திரம் ஒன்றில் சென்றுவிட்டுத் திரும்பிவரும்போது இராணுவ முகாமிலிருந்து 700 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் இராணுவத்தினரின் உழவு இயந்திரத்தின் மீது கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் இதுவரை கிடைக்கவில்லை.

அதேவேளை இத்தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டன.

# தூரதர்சன் இயக்குனர் மீது துப்பாக்கிச் சூடு

(டில்லி)

இந்திய தொலைக்காட்சி நிறுவனமான தூரதர்சனின் தலைமை இயக்குனர் சிவசர்மா நேற்றுக்காலை புதுடில்லியில் சுடப்பட்டார்.

படுகாயமடைந்த சிவசர்மா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அபாய கட்டத்தைத் தாண்டிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் தனது காரில் அலுவலகத்திற்குவந்துகொண்டிருந்த சிவசர்மா சுடப்பட்டதாகவும், காரைச் செலுத்திய சாரதி இறந்துபோய் விட்டதாகவும், இவரது பாதுகாப்பு உத்தியோகத்தரும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

---

அரசாங்க

எஸ். எவ் இன் வண்டி அனுமதி பெறாமல் ஒரு சாலையில் சென்றுகொண்டிருந்தது எனவும், அந்த வண்டி தவறாகக் கருதப்பட்டு தாக்கப்பட்டுவிட்டதாகவும் அறிக்கை முடிவு கட்டிவிட்டது.

இதேவேளை அந்த வண்டி சென்றுகொண்டிருந்த இடத்தில் இருந்து வானத்தில் பறந்த ஹெலிகொப்ரர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டதை எம். எஸ். எவ் அப்படி ஏதும் தாக்குதல்கள் நடாத்தப்படவில்லை என முற்றுமுழுதாக மறுத்துவிட்டது

---

வேங்கைகள்

வரை, ஆக்கிரமிப்புப் படைகளின் மையமாகவே பயன்படுத்தப்பட்டது. விடுதலைப் புலிகள் சிங்கள இராணுவத்தை அங்கிருந்து விரட்டியதன்பின் ஆக்கிரமிப்பின் சின்னமாக இருந்த இக்கோட்டை உடைக்கப்பட்டு வருவது தெரிந்ததே: அன்னியரின் அத்திவாரக் கல்லெடுத்து வேங்கைகள் இந்நாள் எழுதிய சான்றாக இக்கற்களை வைத்திருக்க விரும்புவோருக்காகவே இக்கற்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

---

நேற்றைய

நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் நடைபெறவுள்ளன. இதற்காக முத்தமிழ் விழா மேலும் ஒருநாள் நீடிக்கப்பட்டுள்ளது.

---

# பல்க. மாணவர் பிரிவுபசாரம்

(நல்லூர்)

யாழ் பல்கலைக்கழக இறுதி யாண்டு மாணவர்களுக்கான பிரிவுபசார விருந்து எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக 2ஆம் ஆண்டு மாணவர்களிடம் தலைக்கு ரூபா 250 அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

கொக்கட்டிச்சோலை

தொடர்ச்சியாக இடம்பெற்றதாகவும் அச்செய்தி தெரிவித்தது மேலும், படுகொலைகள் கோரமான முறையில் இடம் பெற்றதாகவும் பலர் அடித்துக் கொல்லப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

கொக்கட்டிச் சோலையில் 1987ஆம் ஆண்டு செரன்டிப் இறால் தொழிற்சாலையில் பெரும் படுகொலை ஒன்றை சிறிலங்கா இராணுவம் நடத்தியமையும் இதில் இத்தொழிற்சாலை ஊழியர்கள் அனைவரும் உட்பட இருநூற்றிற்கும் மேற்பட்ட தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டதும் தெரிந்ததே;

வீடுகள் அழிப்பு

மேலும் இந்த கோர அழிப்பு வேளையின்போது நானூறுக்கும் மேலான பொதுமக்களின் வீடுகளும் அழிக்கப்பட்டுள்ளதாகவும் ஏராளமான பொதுமக்கள் இந்த கிராமத்தை விட்டு ஓடிவிட்டதாகவும் பி. பி. ஸி அறிவித்தது.

---

# தங்கத்தின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேசச் சந்தையில் தங்கத்தின் விலை அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது: ஒரு அவுன்ஸ் தங்கத்தின்விலை 371.90 டொலர்களாக அதாவது இலங்கை ரூபாயில் 15, 247 ஆக அதிகரித்துள்ளது; ஜனவரிக்குப் பின்னர் ஏற்பட்ட ஆகக்கூடிய விலை இதுவாகும். மத்திய கிழக்கில் தங்கத்திற்கு அதிக தேவை ஏற்பட்டதால் இந்தத் தற்காலிக விலை அதிகரிப்பு உருவானது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தாலிக் கொடிகள் அபகரிப்பு

(பாஷையூர்)

பாஷையூர் புனித அந்தோனியார் கோயில் உற்சவம் நேற்றுக்காலை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இரு பெண்களின் தாலிக்கொடிகள் தந்திரமாகத் திருடப்பட்டுள்ளன: ஊர்காவற்றுறையிலிருந்து இடம் பெயர்ந்து வந்த இரு பெண்களிடமே திருடர்கள் தாலிக் கொடிகளை அபகரித்துள்ளனர்.

இறுதிநாள் திருவிழாவான நேற்றுக்காலை பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கூடியிருந்தனர். (43)

# வலி - வடக்கு மக்களின் மாபெரும் எழுச்சிப் பேரணி

(யாழ்ப்பாணம்)

இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக ஐந்து அம்சங்களைக் கொண்ட ஒரு கோரிக்கையை முன்வைத்து வலி. வடக்கு மக்கள் மாபெரும் எழுச்சிப் பேரணியொன்றை நடாத்தவுள்ளனர்;

எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கும் இந்த மாபெரும் எழுச்சிப் பேரணியில்;

★ ஓராண்டு காலமாக எமது மண்ணை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தை வெளியேற்று

★ அரசகூட்டுத்தாபன ஊழியரின் ஊதியத்தையும் ஓய்வூதியத்தையும் ஒழுங்காக வழங்கு

★ விவசாய நிலங்கள், மீன்பிடித் தளங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், வணக்கஸ்தலங்களை விட்டு வெளியேறு

★ நிவாரணங்களை சகலருக்கும் வழங்கு

★ பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கு

ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளன. மேலும் இந்தப்பேரணி காலை ஒன்பது மணியளவில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆரம்பித்து யாழ். அரச செயலகத்தை சென்றடையுமென வலி வடக்கு புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

---

மனித உரிமை

இங்கு வந்த பிற்பாடு சிறிலங்கா அரசு அவர்களுடன் கெடுபிடியாக நடந்து கொள்கிறது.

கொழும்பில் பத்திரிகையாளர் ஒருவர் சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகளிடம், சிறிலங்காவில் மனித உரிமைகள் பற்றிய உங்கள் கருத்து என்ன? என்று கேட்டார். மனித உரிமைகள் பற்றிச் சிறிலங்காவில் கருத்து எதுவும் வெளியிடக் கூடாது என்று சிறிலங்கா அரசு எம்மிடம் உத்தரவாதம் பெற்றுள்ளது என்றார் அவர்.

இதேவேளை சர்வதேச மன்னிப்புச் சபையின் வருகையைத் தொடர்ந்து பல மனித நேய ஸ்தாபனங்கள் சிறிலங்கா வரவுள்ளன. முக்கியமான அமைப்பான ஐ. நா. மனித உரிமைகள் குழுவும் இலங்கை வரவுள்ளது. வாச் ஏசியா (Watch Asia) என்ற மனித உரிமைகள் அமைப்பும் சமீபத்தில் சிறிலங்கா வரும்.

மனித உரிமைகள் அமைப்புகளும், மனித நேய ஸ்தாபனங்களும் சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக சமீபகாலத்தில் கரிசனை கொள்வது அரசுக்குத் தலையிடியை ஏற்படுத்தியுள்ளது.

---

தொடர்ந்தும்

பொன்னாலை, மூளாய் ஆகியபொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி நேற்றும் மூன்றாவது நாளாக ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது; அத்துடன் நேற்று முன்தினம் இரவு திருவடிநிலை கடற்பிராந்தியத்தில் தரித்து நிற்கும் கடற்படை படகில் இருந்து கலிபர் தாக்குதல்களும் நடாத்தப்பட்டது. இத்தாக்குதல்களில் பெரியளவிலான சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (ஈ)

---

சிறிலங்காவுக்கு

வழங்கியிருந்தது. ஆனால், வடக்கிலும், கிழக்கிலும் தொடர்ந்தும் போர் நிகழ்வதால் இந்தப் பாரிய தொகையில் பெரும் பகுதியைப் புனர்நிர்மாண வேலைக்கெனப் பெற முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது.




# சர்வதேச சஞ்சிகைகள் வடக்கு வரத் தடை

சர்வதேச பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்றவற்றை வடபகுதிக்கு அனுப்பப்படுவதை கட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் முற்றாகத் தடுத்துள்ளது.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகள் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வந்தன. தற்பொழுது வடபகுதிக்கு மேற்படி வெளியீடுகளை விநியோகிக்கும் விநியோகஸ்தர்களுக்கு வடபகுதிக்கு அவற்றை அனுப்புவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதிமக்களின் சர்வதேசத் தொடர்புகளில் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டிருக்கின்றது.

# இலங்கைத் தமிழர்கள் கைது

ராஜீவ்காந்தியின் மரணத்தைத் தொடர்ந்து 150க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

---

8 ஆம் நாள்

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திரண்டு வந்த மக்கள் கூட்டம் இம் மைதானத்தை நிரப்பிக் கொண்டது;

விழா ஆரம்பித்து அரைமணி நேரம் சென்றதும் மைதானத்தில் கூடியிருந்த மக்கள் தொகை பல மடங்காக அதிகரித்தது தொடர்ந்தும் மக்கள் அலை அலையாக முற்றவெளியை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

ஆனால் திடீரென சூழ்ந்த கருமுகிற் கூட்டம் மழைபொழிய ஆரம்பித்தமையால் இவ் விழாவை இன்று ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

## தொலைக் கல்வி நெறி

# போதனா ஆசிரியர்களாக முப்பது பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தொலைக் கல்விநெறிப் போதனா ஆசிரியர்களாக யாழ். மாவட்டத்தில் இருந்து முப்பது பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையிலேயே யாழ் மாவட்ட கோட்டப் பிரிவுகளை உள்ளடக்கி அதிகூடிய புள்ளி அடிப்படையில் மேற்படி தெரிவு இடம் பெற்றது.

இதில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் ஆறுபேரும் சிரேஷ்ட போதனா ஆசிரியர்களாகவும் ஏனைய இருபத்திநான்கு பேரும் உதவி போதனாசிரியர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட முப்பது பேரினது விபரங்களும் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இம் மாத இறுதிக்குள் தேசிய கல்வி நிறுவனத்தால் அனுப்பிவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

தாயும் மகனும்

பெண்ணும் உதவியதாகவும் தெரிவிக்கப்படுவதோடு, இவர்களைவிட 18வயது ஒரு ஆணும், ஒரு பெண்ணும் இக் குண்டுவெடிப்புடன் சம்பந்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொலையுடன் சம்பந்தப்பட்ட இம்மூவருக்கும் அடைக்கலம் கொடுத்தவர்களே கைது செய்யப்பட்ட தாயும் மகனுமாகும்.

அதேவேளை கைது செய்யப்பட்ட பெண்ணின் அச்சகத்தில் விடுதலைப்புலிகளுக்குரிய துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.